**தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கக்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களினால் 2023 திசெம்பர் 31 திகதியன்று அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன், இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கின்ற வகையில் தயாரிக்கப்டுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையில் 3.4(அ) குறிப்பிடப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2 நிதி மீளாய்வு**

**2.1 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய ஏற்பாட்டின் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் மற்றும் மூலதன செலவிற்காக 18 அமைச்சுக்கள் மற்றும் 26 திணைக்களங்களில் இருந்து முறையே ரூபா 3,773 மில்லியன் மற்றும் ரூபா 1,191 மில்லியனாக கூட்டுத் தொகை ரூபா 4,964 மில்லியன் வழங்கி இருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் கூட்டுத் தொகை ரூபா 4,735 பயன்படுத்தப்பட்டு ரூபா 229 மில்லியன் அதாவது 46 சதவீதம் ஏற்பாடு எஞ்சியிருந்தது. அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டினுள் செலவிட வழங்கியிருந்த ஏற்பாட்டில் 46 சதவீத ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதா நெருக்கடி மற்றும் முற்பணம் ஒதுக்கிக் கொள்ளும் கடினம் காரணமாக மூலதன கருத்திட்டங்களை செயற்படுத்துவதனை மட்டுப்படுத்திய காரணத்தால் எஞ்சியுள்ளது. அபிவிருத்தி நிதித் திணைக்களம் உபுல்தெனிய தானிய களஞ்சியத்தில் செயற்பாட்டு செலவு மற்றும் மேம்படுத்தல் செலவிற்காக ரூபா 12,000,000 ஆன ஏற்பாடுத் தொகையை ஒதுக்கிய போதும் பொருளாதார நிலையின் முன் மேம்படுத்தல் மேற்கொள்ளாததால் 46 சதவீத ஏற்பாடு எஞ்சியுள்ளது. | கிடைக்கும் ஏற்பாட்டை பயன்படுத்தி கருத்திட்ட எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவபடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குடிநீர் தேவையுடைய கிராம அலுவலர் பிரிவுகளில் பயன்பாட்டிற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 07 பிரதேச செயலக பிரிவுகளிற்கு வழங்கியிருந்த 1000 லீற்றர் கொண்ட 97 நீர் தாங்கிகள் மற்றும் 500 லீற்றர் கொண்ட 11 நீர் தாங்கிகள் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன. | தேவைப்படும் போது சுத்திகரித்து பயன்படுத்த முடியுமானவாறு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. | சொத்துக்கள் வினைத் திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த மற்றும் சொத்துக்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XIX ஆம் அதியாயத்தின் 6.15 பிரிவு | - | அனுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 12 உத்தியோகபூர்வ இல்லங்களின் குத்தகை காலம் 05 ஆண்டுகளை விஞ்சியுள்ள போதும் இல்லங்களை பெற்ற அலுவலர்கள் அந்த இல்லத்தில் இருப்பதால், அரச இல்லங்கயை எதிர்பார்த்து காத்திருப்பு பட்டியலில் 78 அலுவலர்களிற்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது. | தாபன விதிக் கோவை XIX ஆம் அதியாயத்தின் 6.12 பிரிவின் பிரகாரம் இல்லங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ii) | XIX ஆம் அதியாயத்தின் 7.2 பிரிவு | | குத்தகை காலத்தை விஞ்சி இல்லமொன்றில் குடியிருக்கும் காலப் பகுதிக்காக சம்பளத்தில் 8 சதவீதம் மற்றும் அந்த இல்லத்திற்கு மதிப்பிடப்படும் சந்தை வாடகை உள்ளிட்ட தண்ட வாடகையொன்றை அறவிட வேண்டிய போதும், 08 இல்லங்களில் குடியிருக்கும் அலுவலர்களின் சம்பளத்திலிருந்து 08 சதவீத தண்ட வாடகை மாத்திரம் அறவிடப்படுகின்றது. | தாபன விதிக் கோவை XIX ஆம் அதியாயத்தின் 6.12 பிரிவின் பிரகாரம் இல்லங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குடியிருக்க வேறொரு இடத்தை தேடிக் கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் 08 சதவீத தண்ட வாடகைக் அறவிடப்படுகின்றது. | தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிககை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி | மாவட்ட செயலகத்தனால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படாததால் அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக செயல் நடவடிக்கை திட்டம், அதற்கு ஒத்ததாக பெறுகைகள் திட்டமும் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிககை எடுக்க வேண்டும். |

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இல் அனுராதபுரம் அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மற்றும் சுற்றுலா விடுதிக்கு 05 கிலோவொட் மற்றும் 10 கிலோவொட் கொள்ளவு கொண்ட 02 சூரிய கதிர் மின்சார தொகுதிகளை இஸ்தாபிக்க ரூபா 2,405,200 தொயையான உடன்பட்ட தொகையை செலுத்தும் போது நிதிப் பிரமாணம் 237(அ)(i) பிரகாரம் மணுதாரர் இணங்கிய அளவுத் திட்டம் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் சூரிய கதிர் மின்சார தொகுதிகளை பொருத்துதல், பரிசோதனை அறிக்கை சமர்ப்பித்தல், உத்தரவாதத்துடன் சமர்ப்பித்தல் போன்றை உரியவாறு மேற்கொள்ளப்பட்டள்ளதாக தொழிநுட்ப அறிக்கையை பெற்றுக் கொள்ளாது மேற்கொண்ட காரணத்தால் 2023 நவம்பர் மாதம் முதல் கணக்காய்வு திகதிய 2024 மார்ச் 01 திகதி வரை மூன்று மாதங்களிற்கு அதிக காலமாக செயலிழந்து காணப்பட்ட அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்தின் 05 கிலோவொட் கொள்ளவு கொண்ட சூரிய கதிர் மின்சார தொகுதியை குறித்த உத்தரவாத பத்திரத்தின் மீது மீண்டும் சுமுக நிலைக்கு ஆக்கிக் கொள்ள இயலாதிருந்தது. | இந்த வழங்கலிற்கு குறித்த பட்டியல் தொழிநுட்ப ஆய்வு குழு அங்கத்தவர் மாவட்ட பொறியியலாளரின் பரிந்துரை மீது தீர்க்கப்பட்டுள்ளது. 2024 ஏப்ரல் 04 திகதி மின் அஞ்சல் தகவல் மூலம் முன் திருத்தங்களை இணையத்தினூடாக பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கோள்வனவின் போது மற்றும் சேவையை பெற்றுக் கொள்ளும் போது நிதிப் பிரமாணம் மற்றும் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளில் வசித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள காணியற்ற நபர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் தற்பொழுது காணிக்கு தகமையுள்ள எனினும சட்டரீதியான உரிமை இல்லாத நபர்களுக்கு முறைப்படியான அதிகாரப் பத்திரத்தினை வழங்குவதற்காக காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க காணி முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால் காணிக் கச்சேரியினை நடாத்தி காணிகள் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் றம்பேவ, மத்தியமநுவரகம பிரதேசம் மற்றும் நாச்சாதூவ பிரதேச செயலக பிரிவுகளில் 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 02 ஆண்டுகள் அல்லது அதற்கு அதிக காலமாக காணிக் கச்சேரிகள் நடாத்தப்படவில்லை. | 2024 ஆண்டில் காணிச் கச்சேரியை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய காலத்தில் காணிச் கச்சேரிகளை நடாத்த வேண்டும். |

3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் செயற்படுத்திய கடன் நிகழ்சித் திட்டத்தின் கீழ் 10 பிரதேச செயலக பிரிவுகளில் கால்நடை வள கடன் வழங்குவதற்காக ஆரம்பித்துள்ள வங்கிக் கணக்குகளில் ரூபா 33,313,252 தொகை குறித்த பணிக்காக ஈடுபடுத்த போதாதென குறிப்பிட்டு இரண்டு ஆண்டுகளிற்கு அதிக காலமாக செயலற்று காணப்பட்டது. | வழங்குகின்ற கடன் தொகை ரூபா 100,000 ஆன போதும் தற்போது பசு மாடொன்றின் பெறுமதி ரூபா 250,000 அளவிலாவதால் நலன்பெறுனர்கள் இந்த கடனை நிராகரிக்கின்றனர். அது பற்றி இலங்கை மகளிர் பணியகத்திற்கு அறிவித்து அனுப்பியுள்ளதுடன், அமைச்சின் தீர்மானம் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படும். | பொது நிதி பொருளாதார ரீதியாக, ஆக்கபூர்வமாக எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ள இயலுமானவாறு பயன்படுத்த வேண்டும். |

**3.3 எதிர்பார்த்த நலன்களை (Outcome) அடைந்து கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | சௌபாக்கிய உற்பத்தி கிராமங்களை அமைக்கும் கருத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் செயற்படுத்திய பின்வரும் பிரதேச செயலக பிரிவுகளில் கருத்திட்டங்கள் பலவீனமான முன்னேற்றத்தை காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கலனேவ பிரதேச செயலக பிரிவில் பெறிய வெங்காய விதை மற்றும் மஞ்சள் பயிரிடும் உற்பத்தி கிராமத்தை அமைக்க ரூபா 14,580,865 செலவிடப்பட்டு இருந்ததுடன் இலக்கு மயப்பட்ட 07 இல் 06 கருத்திட்டத்தின் ஊடாக நிறைவேறி இருக்காததால் உற்பத்தி கிராமங்கள் எதிர்பார்த்தவாறு அமைக்கப்பட்டு இருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக உற்பத்தி கிராமங்களின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள சில காலம் கடந்த போதும் தற்போது அரசினால் செய்யப்பட்ட அனைத்து கொள்வனவுகளும் நலன் பெறுனர்களிற்கு பகிர்ந்து முடிவடைந்துள்ளதுடன் நலன் பெறுனர்களினால் அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | சரியான சாத்தியப்பாட்டு ஆய்வின் பின்னர் கருத்திட்டங்களை தெரிவு செய்து அடைந்து கொள்ள முடியுமான நோக்கங்களை, செயலாற்றுகை பிரமாணங்களுடன் தீர்மானித்து, அந்த நோக்கங்களை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக அடையப்பெறும் வகையில் கருத்திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் தேவையான பின்னூட்டலுடன் கருத்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள முன்செல்ல வேண்டும். |
| (ii) | கஹடகஸ்திகிலிய பிரதேச செயலக பிரிவில் சௌபாக்கிய உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு நெல் உற்பத்தி கிராமத்திற்காக உற்பத்திக்கு நேரடியாக தொடர்புபட்ட குலம், கால்வாய்கள், அணைக்கட்டுகளை தயாரிப்பதுடன் தொடர்பான 05 செயற்பாடுகளை மேற்கொள்ளாது நெல் உற்பத்திக்கு மறைமுகமாக பங்களிக்கும் பாதைகளை நிர்மாணித்தல், செயற்கை பசளை உற்பத்தி, சூடு மிதிநிலமொன்றை | 2022 ஆண்டின் பின்னர் இது தொடர்பாக எவ்வித நிதி ஏற்பாடும் ஒதுக்கப்படவில்லை. அதனால் எதிர்பார்த்த நோக்க இலக்கை அடைந்து கொள்ள முடியாதுள்ளது. எனினும் 2022 ஆண்டின் போது ‘‘கூட்டான முகாமைத்துவ நிகழ்சித் திட்டம்’’ கீழ் கருத்திட்டத்தை செயற்படுத்த தேவையான உள்நாட்டு விதை நெற்கள் விவசாயிகளிற்கு வழங்கப்பட்டுள்ளது. | கருத்திட்டங்களை ஆக்கபூர்வமாக நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணித்தல், அறிவை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளிற்காக ரூபா 4,078,584 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் நோக்கம் எதிர்பார்த்தவாறு அடையப் பெற்றிருக்கவில்லை. | | |
| (ஆ) | கிராம சக்தி சங்கங்களை செயற்படுத்தும் ii கட்டத்தின் கீழ் 10 பிரதேச செயலகங்களில் 88 கிராம சக்தி சங்கங்களிற்கு இடையில் 60 சங்கங்கள் செயலற்று காணப்பட்டன. அந்த செயலற்ற சங்கங்களில் 2023 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 3,760,452 ஆன பண மீதியொன்று காணப்பட்டது. | கிராம சக்தி நிகழ்சித் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக சௌபாக்கிய அபிவிருத்தி பணியக பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கடடித்தை தேவையான நடவடிக்கைகளிற்கு பிரதேச செயலாளர்களிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் நோக்கத்தை ஆக்கபூர்வமாக அடைந்து கொள்ளும் வகையில் செயற்படுத்த வேண்டும். |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள** |
|---|---|---|---|
| (அ) | காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மற்று வீடமைப்பு நடவடிக்கைகளிற்காக வழங்கியுள்ள ஒப்படைப் பத்திர உரிமையாளர்களினால் பல கம்பனிகளிற்கு தொலை தொடர்பு கோபுரங்களை நிர்மாணிக்க வர்த்தக நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த அந்த காணிகளின் பகுதிகளை வழங்கியுள்ள சந்தர்ப்பங்களில் 2020 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 2020/02 கொண்ட காணி ஆணையாளர் நாயகத்தின் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கியுள்ள ஒப்படைப் பத்திரங்களின் பின்நடவடிக்கைகள் தலைப்பிலான சுற்றறிக்கை பிரகாரம் குறித்த ஒப்படைப் பத்திரங்களை அரசிற்கு சுவீகரித்து மேற்குறித்த சுற்றறிக்கையின் vi பிரிவின் அறுவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 14 பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 139 தொலை தொடர்பு கோபுரங்கள் தொடர்பில் மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கற்றாளை பயிச் செய்கை அதனுடன் சார்ந்த உற்பத்தி கருத்திட்டமொன்றை தனியார் கம்பனியொன்றினால் செயற்படுத்துவது தொடர்பான கருத்திட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | ராஜாங்கனய பிரதேச செயலக பிரிவில், போகம் 18 இலக்கம் 456 கொண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் விவசாயிகளிற்கு, காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(2) பிரிவின் கீழ் குடியிருப்பு நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகளிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ள காணிகளின் எல்லை கற்களை அகற்றி கற்றாளை பயிர் செய்கை மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி கருத்திட்டமொன்றை செயற்படுத்த தனியார் கம்பனி ஒன்றிற்கு 2019 ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. இக் காணித் துண்டுகளை மீண்டும் அரச நிலஅளவை அலுலகத்தின் அறிவுறைப் பிரகாரம் வரைபட பிரகாரம் மீண்டும் கற்களை நட்டு ஒதுக்கித் தருமாறு 2020 ஜுன் 17 திகதி அனுராதபுரம் காணி ஆணையாளரினால் (மாகாணக்களிற்கு இடையில்) ராஜாங்கனய பிரதேச செயலாளரிற்கு அறிவூட்டியிருந்த போதும் அதன் பிரகாரம் எல்லை கற்களை மீண்டும் நட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எல்லை கற்களை மீண்டும் அமைப்பது தொடர்பாக குறித்த நிறுவனத்தை அறிவூட்டி 2020.09.28 திகதி மற்றும் 2020.09.05 திகதியுடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | எல்லை கற்களை மீண்டும் அமைப்பதனை விரைவுபடுத்த வேண்டும். |
| (ii) | தொழிற்சாலை ஒன்றை மற்றும் நீர் தாங்கி மற்றும் நீர் சுத்திகரிப்பதற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் 02 காணித் துண்டுகளை வழங்க காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 செப்டம்பர் 16 திகதி அங்கீகாரம் கிடைத்திருந்த போதும், 2023 ஆகஸ்ட் 14 ஆகிய கணக்காய்வு திகதி வரை 02 ஆண்டுகள் கடந்துள்ள போதும் நீண்ட கால குத்தகை பத்திரம் கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை. இது தொடர்பாக நிலஅளவை அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அளவையிடல் | 2024 ஆண்டிற்குரிய வரித் தொகை செலுத்தப்படவில்லை. அளவையிடல் நடவடிக்கைகளிற்காக நிலஅளவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நீண்ட கால அனுமதிப் பத்திரத்தை வழங்க துரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோரிக்கை 2021 செப்டம்பர் 27 திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் மொத்த மதிப்பீட்டின் மீது 02 ஆண்டுகளிற்கு வரியொன்று அறவிடப்பட்டு இருந்தது. மேலும், நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்காதனூடாக அரசின் எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெற்றிருக்கவில்லை. | | |
| (iii) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இலக்கம் NCPO/AD/07/1302/2019 கொண்ட மற்றும் 2019 செப்டம்பர் 24 திகதிய கடிதம் பிரகாரம் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிக்க எதிர்பார்ப்பின் அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது தொழிற்சாலையை நிர்மாணிக்க உத்தேச காணியில் 04 அடியளவிலான மண் படிவொன்று காணியிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (vi) | கருத்திட்டத்துடன் தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் காணி அமைச்சரினால் அமைச்சரவைக்கு 2021 ஆகஸ்ட் 27 திகதி சமர்ப்பித்து அங்கீகரத்த உத்தேசத்தின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் இயற்கை பசளை பயிர் செய்கை முறையின் கீழ் ஏற்றுமதிக்காக கற்றாளை மூலிகையின் மருத்துவ உற்பத்தி தொழிலொன்றை ஆரம்பித்தல் மற்றும் மொத்த முதலீடு மற்றும் ஆரம்ப முதலீடு முறையே அ.டொ 783 மில்லியன் மற்றும் 300 மில்லியனை பெற்றுக் கொள்வது நோக்கான போதும், அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 02 ஆண்டுகள் காலம் கடந்துள்ள போதும் அந்த நோக்கம் எதுவும் இடம்பெற்று இருக்கவில்லை. | இந்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவ தொடர்பில் பிரதேச யெலளாரின் பொறுப்பு இல்லையென தயவுடன் அறிவிக்கிறேன். | கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் 08 பிரதேச செயலக பிரிவுகளில் அனர்த்தத்திற்கு உட்பட்ட 53 நபர்களிற்கு மதிப்பீட்டு பெறுமதியில் செலுத்த எஞ்சியுள்ள ரூபா 1,439,366 தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை செலுத்தியிருக்கவில்லை. | சில நபர்களின் ஆதனம் அமைந்துள்ள காணியின் உரிமையை உறுதி செய்யாததால் இழப்பீடு வழங்க இயலாதுள்ளது. பல நபர்களின் இழப்பீட்டு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை கண்டறிய முடியாததால் அந்த கோரிக்கை கடிதங்களின் உறுதி செய்த பிரதிகளை எனக்கு அனுப்புமாறு பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்காக தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்திலிருந்து ஏற்பாடு கோரப்பட்டுள்ளது. 2020.04.01 திகதிக்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு சேதங்களிற்காக காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் மூலம் எஞ்சிய தொகை செலுத்தல் மேற்கொள்ள வேண்டும். | அனர்த்த தொகையை விரைவில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மாவட்ட செயலகத்தில் மற்றும் 22 பிரதேச செயலகங்களில் உயர் மட்ட 28 பதவிகளும், மூன்றாம் மட்ட 26 பதிவிகளும், இரண்டாம் மட்ட 24 பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்ட 18 பதவிகள் தொடர்பாக பொருத்தமானவாறு செயற்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ்வலுவலகத்தில் மற்றும் 22 பிரதேச செயலகங்களில் அங்கீகார மற்றும் உள்ளவாறான ஆளணியை போன்றே வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பான விபரங்கள் சரியானதாகும். | ஆளணியினர் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 08 பிரதேச செயலகங்களில் அங்கீகாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர் பதிவி அளவை விஞ்சி 95 அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர் | மேலதிக அபிவிருத்தி அலுவலர்கள் தொடர்பாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிக அபிவிருத்தி அலுவலர்களை வெற்றிடமுள்ள அலுவலகங்களிற்கு இணைக்க வேண்டும். |